**சார்பு நீதிமன்றம், ஓமலூர்**

SC.No.105/2023

Cr.No.359/2022

நாள். 23.09.2024.

The oaths Act 1969 Act No.44/1969 விதிமுறைகளின்படி 23.09.2024 ம் நாளாகிய இன்று திரு.ரத்தினவேல், கண்காணிப்பாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி மொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை திறந்த நீதிமன்றத்தில் செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி: | :.அ.சா.9 | ஜாதி | :----------- |
| பெயர் | செங்கோட்டையன் | தொழில் | : |
| த/பெ. | : | மதம் | : |
| கிராமம் | : | வயது | : |
| வட்டம் | : | | |

**முதல் விசாரணை:- சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். எதிரிகள் ஆஜர்.**

நான் குறுக்குபட்டியில் குடியிருக்கிறேன். நான் தறி வேலை செய்கிறேன். அம்மன் தியேட்டர் கே.ஆர் தோப்பூரில் நானும், கார்த்தியும் பேசிக்கொண்டிருந்தோம். அப்போது காவல் ஆய்வாளர் வந்தார். நான் பேசிக்கொண்டிருந்தபோது இரண்டு நபர்களை கூட்டிவந்தார். அவர்களை அடையாளம் தெரியுமா என்றால் ஆஜர் எதிரிகளில் கட்டம்போட்ட சட்டை அணிந்தவர் (2 ம் எதிரி) இருந்தார். தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள தங்க செயின்தான் எதிரிகளிடம் இருந்து போலீசார் வாங்கியது. யாரிடம் இருந்து வாங்கினார் என்றால் எதிரி சதீஷ்குமாரிடம் இருந்து வாங்கினார். வேறு பொருட்கள் எடுக்கப்பட்டதா என்றால் செயின் மட்டும் எடுத்தார்கள். 2 வது எதிரியின் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். மேற்படி கையெழுத்து **அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னுடன் கார்த்தி என்பவரும் கையெழுத்து செய்தார். தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். மேற்படி கையெழுத்து **அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னுடன் கார்த்தி என்பவரும் கையெழுத்து செய்துள்ளார். போலீசார் ஏதாவது எங்களை கட்டாயப்படுத்தி கையெழுத்து பெற்றார்களா என்றால் இல்லை, நாங்களே தான் கையெழுத்து செய்தோம். போலீசார் நகையை பறிமுதல் செய்தது

எதிரிகளிடம் இருந்து தான் செய்தார்கள். எதிரிகள் ஒப்புதல் வாக்குமூலமும் என்முன்பாகத்தான் அளித்தார்கள்.

**(1, 3 எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.)**

ஒப்பம்/- PW9

சாட்சி சொன்ன சங்கதிகள் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன் கையொப்பம் இடப்பட்டது.

ஒப்பம்/- உதவி அமர்வு நீதிபதி,
ஓமலூர்.